# சிவவாக்கியரின் தத்துவங்கள்

59

த.சிவசெல்வி & முனைவர் ச.பிரியதர்சினி [2]

[1] முதுகலை முதலாமாண்டு தமிழ், 2 இணைப்பேராசிரியர்,

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

கோயம்புத்தூர் - 641043

மின்னஞ்சல் – – sivaselvi9595@gmail.com, priyadharshini_tam@avinuty.ac.in

**ஆய்வுசுருக்கம்**

தமிழில் காலந்தோறும் ஏற்பட்ட பதிவுகளில் சித்தர்களின் சிந்தனைப் பதிவும் குறிப்பிடத்தக்கது. சித்தர் இனம் நீண்ட நெடுங்காலமாக இந்த நிலத்தில் வேரூன்றிய விழுதாகப் பரவியுள்ளனர். பட்டினத்தாரும் தாயுமானவரும் வள்ளலாரும் சித்தர் தத்துவங்களைக் கோட்பாடுகளாக்கிக் கொத்தவர்கள் என்பதை இலக்கியவரலாறு இயம்பும். பக்தர்கள் கடவுளைக்காண முயற்சி செய்கிறார்கள் ஆனால் சித்தர்கள் கடவுளைக்கண்டு ஒளிர்ந்தவர்கள் என்று தேவாரப் பாடல்கள் பதிவு செய்கின்றன. சித்தர்கள் தங்கள் ஆத்ம சாதனைகளின் மூலம் எய்தப் பெற்றவர்கள். இவ்வாறாக விளங்குபவர்கள் பதினெண் சித்தர்கள் ஆவர். அவற்றில் மானிடர்களுக்கான சிவவாக்கியரின் தத்துவங்களைப் பற்றி எடுத்துரைப்பதாக இவ்ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** ஐந்தெழுத்து மந்திரம் - கும்பகம் - குண்டலினி - பரம்பொருள் -சோதி

**முன்னுரை**

சித்தி என்ற சொல்லுக்கு அறிவு என்று பொருள். எனவே சித்தர்கள் என்பவர்கள் அறிவுடையோர் என்பர். சித்து என்பதற்கு சித்தி என்று பொருள் உண்டு. எண் பெஞ்சித்திகள் பெற்றவர்கள் சித்தர்கள் ஆவர். அவை

| | |
|---|---|
| அணுமா | - ஆன்மாவை போல் ஆதல் |
| மகிமா | - மகத்துவம் ஆதல் |
| கரிமா | - மலை போல் கடினமாதல் |
| இலகுமா | - இலகுத்தமாதல் |
| பிராத்தி | - வேண்டுவன அடைதல் |
| பிரகாமியம் | - நிறையுளன் ஆதல் |

ஈசத்துவம் - ஆட்சியுளன் ஆதல்

வசித்துவம் - எல்லாம் தன் வசமாக்கவல்லனாதல்

இவ்வெண் சித்திகளும் கைகூடப் பெற்றோர் சித்தர் எனப்படுவர் என்று கூறுவது உண்டு. சித்து என்பதற்கு ரசவாதம் என்று வேறொரு பொருள் உண்டு.(ஈரா.திருமுருகன் சித்தர் பாடல்கள்,பக்7) இவ்வாறான சித்தர்களில் சிறந்து விளங்குபவர் சிவவாக்கியர் . இவர் கூறும் மானிட உண்மைகள் மற்றும் யோக நிலையால் இறைவனை அடையக்கூடிய வழிமுறைகளை எடுத்துரைக்கின்றார்.

**சிவவாக்கியர்**

சிவவாக்கியரின் இயற்பெயர் தெரியவில்லை. சிவவாக்கியம் என்ற நூலைச் செய்தமையால் இவருக்கு வந்த காரணப் பெயரே சிவவாக்கிர். சிவவாக்கியம் என்பது இவரே தன் நூலுக்கு இட்டபெயர் என்பதாகும்.

**கரியதோர் எழுத்தையுன்னிச் சொல்லுவேன் சிவவாக்கியம்** (காப்பு)

என்று இவர் பாடுவதால் தெரிகிறது. (ஈரா.திருமுருகன் சித்தர் பாடல்கள் ப.7) அறிஞர் மு.அருணாச்சலம் சிவவாக்கியர் 14 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 15 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர் என்கிறார். (தமிழ் இலக்கிய வரலாறு 14-ஆம் நூற்.பக்.356) சித்தர்பாடல்களில் புரட்சியாகவும் மிகுதியாகவும் பாடியவர் இவரே. “சிவாயமே”என்ற தொடரைத் தம் பாடலின் இறுதி சீராகப்பல பாடல்கள் பாடியுள்ளார். இதனாலேயே சிவவாக்கியர் என்ற காரணப்பெயர் இவருக்குவந்துள்ளது எனலாம். சிவத்தை தம் வாக்கியமாகக் கொண்டவர் என்பது இவர் பெயரின் விளக்கமாகும். சிவவாக்கியம் சொல்வேன் என்று இவர் முதல் பாடலில் பாடியதை அறியலாம்.

இவர் முன்பு வைணவராக இருந்து பிறகு சைவராக மாறியதாக கூறுவர். அதற்கு ஏற்பப் பல பாடல்களில் ராமநாமத்தைப் போற்றி வணங்குவதும் கண்ணனைச் சொல்வதும் சான்றாகக் கொள்ளலாம். வைணவராக இருந்த போது இவரை திருமழிசை ஆழ்வாராக இருந்தார் என்பர் சிவவாக்கியர் சமூகத்தின் இழிவுகளை சாடிப் பாடிய சித்தர். வெறும் சடங்குகளால் மட்டும் கடவுளை அடைய முடியாது என்ற கொள்கையைப் பரப்ப பல பாடல்களை பாடியுள்ளார். அப்பாடல்களில் நாத்திக நெடி வீசுமளவு மிகுதியாயிருப்பதால் இவர் முன்பு நாத்திகராக இருந்து மாற்யதாகவும் நினைப்பர். ஞான நிலையில் பேசும் பேச்சுக்கள் இப்படி நாத்திகம் போல் தெரிவது இயற்கை. கடவுள் இவரின் பக்தி சமுதாயத்திற்கு யோகநிலை, அறிவுநிலை என்னும் நிலைகளில் இறைவனை எவ்வாறு அடைய முடியும் என்பதை சிவவாக்கியர் பதிவு செய்துள்ளதை அறியலாம்.

**சிவவாக்கியர் தத்துவம்**

சமய ஒருமை, சாதியை ஒழித்தல் ஆகியன குறித்த கருத்துகளை சிவவாக்கியார் கூறுவதுடன் பரம்பொருள் கோட்பாடு சமய ஒருமைக்க வழிவகுக்கும் என்கிறார். சாதிப் பிரிவுகள் மனிதனால் கற்பிக்கப் பட்டவையே தவிர உண்மையானவை அல்ல என்கிறார். சமூகம் மேன்மையை ஏற்படுத்துவதற்கு தனிமனிதர்களிடம் நல்லுணர்வும் அறவழிப்பட்ட இல்லறமும் ஈகைப்பண்பும் தெளிந்த சிந்தனையும் இருக்க வேண்டும் என்பதையும், மேலும் சமுதாய உணர்வினால் ஈர்க்கப்பட்டு தமது கண்ணெதிரே கண்ட இழிவுகளையம் சீர்கேடுகளையும் போக்கி சமுதாயத்தை மாற்றி அமைக்கும் பணியில் சித்தர் நெறியை பின் பற்றி தனது சிந்தனைகளின் வழி அறிவுறுத்துகிறார். அவரின் பாடற் கருத்துக்கள் அக்கால சமய, சமூகப்பண்பாட்டு வரலாற்றை பிரதி பலிப்பதுடன் மாற்றத்தை நோக்கி செயல் பட்ட அவர்தம் சிந்தனைப் போக்கையும் தெளிவாகச் சுட்டுகின்றன. மனிதர்களை நெறிப்படுத்துவனாகவும் மனித நேயத்தை வளர்பனவாகவும் சமத்துவப் பண்பை வலி யுத்துவனவாகயும் விளங்க வேண்டும் என்பதே சிவவாக்கியர் கூறும் தத்துவமாகும். (இரா.திருமுருகன், சித்தர் பாடல்கள்ப.41)

**சிவவாக்கியரின் பாடல் இயல்பு**

பொதுவாகத் தங்களுடைய கருத்துக்களை வெளிப்படையாகக் கூறாமல் குறிப்பாக கூறுவது சித்தர்களின் வழக்கம். வெளிப்படையான சொற்களை பயன்படுத்தி கருத்துகளை மறைத்துக் கூறுவர். சிவவாக்கியர் பல இடங்களில் குறிப்பு மொழிகளை பயன்படுத்துகிறார்.

**விண்கடந்து நின்ற சோதி மேலைவாசலைத் திறந்து**
**கண்களிக்க உள்ளுளே கலந்துபுக் கிருந்தபின் (121)**

இதில் மேலை வாசல் என்பது, மூலாதாரத்துக்கு மேலாக உள்ள பிந்து சக்கரம் என்பதை குறிக்கும். மூலாதாரத்தில் உள்ள ஆற்றலை தட்டி எழுப்பி பிந்து சக்கரத்தை அடைவிக்கும் போது அகக்கண்கள் மூலம் இறைவனை காணலாம் என்பது இதன் குறிப்புப் பொருள் என்பர். இதனைப் போன்றே பல குறிப்புப் பொருள்களை சிவவாக்கியர் தன்னுடைய பாடல்களில் பயன்படுத்திள்ளார்.

**ஆனஅஞ்சு எழுத்துளே அண்டமும் அகண்டமும்**
**ஆனஅஞ்சு எழுத்துளே ஆதியான மூவரும்**
**ஆனஅஞ்சு எழுத்துளே அகாரமும் மகாரமும்**
**ஆனஅஞ்சு எழுத்துளே அடங்கலாவது உற்றதே.**(சிவவாக்கியார்பா.1)

அண்டமாகிய இந்த உலகம், அகண்டமாகிய இந்த பிரபஞ்சம் இரண்டும் திருவைந்தெழுத்திற்குள்ளே அடங்கிவிடும் என்றும், எல்லாவற்றிற்கும் ஆதியாகிய பிரம்மன், திருமால், உருத்திரன் ஆகிய மூவரும் இம்மந்திரத்தில் அடங்கியுள்ளனர். சிவன் எல்லாம் அறிந்தவர் எல்லாம் செய்தவர் இன்னும் செய்பவர் ஆகையினால் அவரைக்குறிக்கும்

ஐந்தெழுத்திலும் பூமியிலும் யாவும் அடக்கம் என்கிறார்.

**ஞானநிலை**

பரம்பொருளாகிய இறைவன் என்றுமே நமக்குள் இருக்கிறார். அவ்வாறான இறைவனை நாம் நமக்குள்ளேயே தேடிப் பார்க்க வேண்டும் என்று கூறுகிறார்.

**என்னிலே இருந்தஒன்றை யான்அறிந்த தில்லையே**
**என்னிலே இருந்தஒன்றை யாவர்அறிந்து கொண்டபின்**
**என்னிலே இருந்தஒன்றை யாவர் கானவல்லரோ**
**என்னிலே இருந்திருந்து யான்உணர்ந்து கொண்டேனே**

(சிவவாக்கியார் பா.2)

நமக்குள் இருக்கின்ற பரம்பொருளை நாம் மட்டுமே அறிய முடியும். அப்படி அறிந்த பிறகுயாரும் அதை அறியும் முற்படுவதில்லை முடியவும் இல்லை என்பதால், நமக்குள் நாம் தேடி உணர்ந்தால் இறைவனை அடைய முடியும் என்று அறிவுறுத்துகிறார்.

**நினைப்பதொன்று கண்டிலேன் நீயலாது வேறிலை**
**நினைப்புமாய் மறப்புமாய் நின்றமாயை மாயையோ**
**அனைத்துமாய் அகண்டமாய் அனாதிமுன் அனாதியாய்**
**எனக்குள்நீ உனக்குள்நான் இருக்கும் ஆறுஆறு எங்ஙனே**

(சிவவாக்கியர்.

பா .6)

பரம்பொருளைத் தவிர நெடு நேரம் நிண்ட காலம் நிணைப்பதற்கு யாரும் இல்லை. அனைத்து மாய்நீ இருக்கின்றாய் எல்லாப் பொருளாகவும் அனைத்துப் பொருள்களுக்கும் அப்பாற் பட்டவனாகவும் தொடக்கம் அறிய முடியாத அனாதியாகவும் இருக்கின்றாய் உன்னை நினைக்கும் போது அனைத்திலும் இருப்பது நீயாக தெரிகின்றது இதனால் நானும் உன்னோடு சேர்ந்த எல்லா இடத்திலும் இருப்பதாக எண்ணிவியக்கின்றேன் என்று சிவவாக்கியர் இறைவன் எப்பொழுதும் தன்னோடு இருப்பதை ஞான நிலையில் கூறுவதுடன் மானுட சமூகமானது இறைவனுடன் ஐக்கியப் பட வேண்டும் என்றும் அறிவுறுத்துகிறார்.

**யோகநிலை**

நாம் பிராணாயாமம் செய்யாமல் இருப்பதால் இறைவனைக் காணமுடிவதில்லை எனவே குண்டலினி சக்தியைப் பயன்படுத்தி பயிற்சி பெறுவதன் வழி இறைவனை எவ்வாறு காணலாம் என்பதை யோகநிலையின் மூலம் அமைத்திருக்கின்ற வழிமுறைகளை உணர்த்தி வழிகாட்டுகிறார்.

**உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவை**
**கருத்தினால் இருத்தியே கபாலம் வல்லிரேல்**
**விருத்தரும் பாலராவர் மேனியுஞ் சிவந்திடும்**

**அருள்தரித்த நாதர்பாதம் அம்மைபாதம் உண்மையே.**

(சிவவாக்கியர் பா5)

நாடியாக உருவம் கொண்டதில் பிராணனாகிய வாய்வு ஒடுங்கும். அப்படி ஒடுங்கிய நாடியை கபாலம் ஆகிய தலை உச்சி வரை எழுமாறு செய்தால் முதியவர்களும் இளையஞர் ஆவர் உடம்பும் சிவந்த நிறம் பெறும். அருள் தருகின்ற சிவன் பாதமும் சக்தி பாதமும் இயல்பாகவே தலையில் கூடுவது உண்மையாகும். கடவுள் இவ்வுலகில் கலந்து உள்ளதை பிரிந்துப் பார்த்து உணராத பாவிகளாக இருக்கிறீர்கள். நீலநிறக் கண்டத்தை உடைய சிவபெருமான் மனதில் இருக்கும் போது எமன் கூட அருகில் வரமாட்டான் என்று தீர்க்கமாக எடுத்துரைக்கிறார்.

**அறிவுநிலை**

அகப்பூசையில் உள்ள பயன் புறப்பூசையில் கிடைப்பதில்லை என்று சிவவாக்கியர் அறிவுநிலையில் கூறுகிறார். இதில் புறப்பூசைகள் செய்வதிலும் மந்திரங்கள் சொல்வதிலும் எவ்விதப் பயனும் இல்லை. அகப்பூசைகள் செய்வதே பரம்பொருளைக் காண வழி வகுக்கும். மேலும் அறிவு நிலையில் இறைவனைக் காண வேண்டும் எனும் உண்மையை உரக்கச் சொல்கிறார்.

**பண்டுநான் பரித்துஎறிந்த பன்மலர்கள் எத்தனை**
**பாலிழே செபித்துவிட்ட மந்திரங்கள் எத்தனை**
**மிண்ராய்த் திரிந்தபோது இறைத்த நீர்கள் எத்தனை**
**மீளவும் சிவாலயங்கள்சூழவந்ததுஎத்தனை.**(சிவவாக்கியர்பா.29)

பூசைக்காக பரித்த பூக்கள் எண்ணற்றவை, முறை இல்லாது ஜெபித்த மந்திரங்கள் ஏராளம், கிணற்றில் இருந்து நீராடுவதற்காக இறைத்தநீர் அளவற்றவை, மீண்டும் மீண்டும் சிவாலயங்களை சூழ்ந்து வந்தது பலமுறை, இவ்வாறாக அகப்பூசையில் உள்ள பயன் புறப்பூசையில் இல்லை என்றும் இந்தமானுடமானது சாதி சமயத்தையும் சடங்குகளையும் போற்றாமல் இறையை உணர்த்தும் யோகப் பயிற்சியின் மூலம் உடல் உள்ளம் நலம் பெற்று நீடுவாழ்வதற்கான வழிமுறைகளை அறிவுறுத்துகிறார்.

**நிறைவாக**

சிவவாக்கியர் சாதி சமய வேறுபாடுகளையும், மூடநம்பிக்கைகளையும், சடங்குகளையும் போற்றாதவராக விளங்குகிறார். ஞானம், அண்டம், அகண்டம், சோதி, விருத்தர், பாலர், நாதர், தினம், ஜெபம், சாத்திரம், ஏகபோகம், சீவம் போன்ற பல வடமொழிச் சொற்களைத் தன்னுடைய பாடல்களில் பயன்படுத்தியுள்ளார். அவருடைய மனதில் உள்ள கருத்துக்களை மனத்துள் உறைத்து இருக்கின்ற இறையை ஞானத்தால் உணர்ந்து உணர்வடைதல் என்பதே நிலைத்தபேறை நித்திய இன்பத்தைநல்கும்.

**துணைநூற்பட்டியல்**


1. இரா.திருமுருகன் - சித்தர்பாடல்கள்
2. சாமிசிதம்பரனார் - சித்தர்கண்டவிஞ்ஞானம்,மணிவாசகர்பதிபகம்
3. மது.ச.விமலானந்தம் - தமிழ்இலக்கியவரலாறு
4. ஜெகதா – சித்தர்களின்வாழ்வும்வாக்கும்,ராமையாபதிப்பகம்,சென்னை.